# உங்களுடைய வீட்டு மொழியைப் பேணல்

NEWCOMER PARENT RESOURCE SERIES

உங்களுடைய வீட்டு மொழியைப் பேணுவது, உங்களுடைய பிள்ளைக்கு சமூகரீதியாகவும் உணர்ச்சிரீதியாகவும் நன்மைகளை வழங்குவது மட்டுமன்றி, அவர்களுடைய புரிந்துகொள்ளும் திறன்களை மேம்படுத்தவும், மூளையின் ஒட்டுமொத்த செயல்பாட்டை அதிகரிக்கவும், அவர்கள் புதிய மொழி ஒன்றைக் கற்றுக்கொள்ளவும்கூட உதவுகிறது என ஆய்வு காட்டுகிறது.




## உங்களுடைய பிள்ளையுடன் உங்களுடைய வீட்டு மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

- ஒவ்வொருவருடனும் உங்களுடைய குடும்பத்தவர்கள் இலகுவாகக் கதைப்பார்கள் அத்துடன் அவர்களால் சிக்கலான கதைகளைச் சொல்லக்கூடியதாகவும் பகிடிகளை மற்றும் பாடல்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.
- நீங்களும் உங்களுடைய பிள்ளையும் அதிக நெருக்கத்தை உணர்வீர்கள்.
- வளமான மற்றும் சொல்திறன் சார்ந்த மொழியை உங்களுடைய பிள்ளை கேட்பார் அத்துடன் பயன்படுத்தக் கற்றுக்கொள்வார்.
- உங்களுடைய பிள்ளை உங்களுடன் உணர்ச்சிகளை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு அதிகமாக இருக்கும்.
- நீங்களும் உங்களுடைய பிள்ளையும் ஒருவரை ஒருவர் நன்கு விளங்கிக்கொள்ள முடியும்.
- உங்களுடைய பிள்ளை உங்களைச் செவிமடுக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கும்.
- தன்னுடைய மொழி மற்றும் கலாசாரத்துடன் அவரது தொடர்பை உங்களுடைய பிள்ளை உணரவும் அத்துடன் அதைப் பற்றி பெருமையடையவும் முடியும்.
- ஏனைய குடும்ப உறுப்பினர்களுடனும் நண்பர்களுடனும் உங்களுடைய பிள்ளை கதைக்க முடியும்.
- இரண்டு மொழிகளையும் மேலும் சிக்கலான வழிகளில் உங்களுடைய பிள்ளை பேசும் வாய்ப்பு அதிகமாக இருக்கும். பாடசாலையில் மேலும் வெற்றிக்கு இது வழி வகுக்கலாம்.

புதிதாகக் குடிபெயர்ந்த பிள்ளைகள் முதன்முதலில் சிறுவர் பராமரிப்பு திட்டத்துக்குச் சமூகமளிக்கும்போது அல்லது பாடசாலைக்குச் செல்லும்போது ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளவோ அல்லது பேசவோ அவர்களால் முடியாமலிருக்கலாம், ஆனால் அது பிரச்சினையில்லை! ஒரு சில மாதங்களுக்குள் அனேகமான பிள்ளைகள் ஆங்கிலம் கொஞ்சம் கற்றுக்கொள்கிறார்கள். அத்துடன் உங்களுடைய பிள்ளை வளரும்போது பெரும்பாலும் ஆங்கிலத்தை அதிகமாகக் கதைக்க ஆரம்பிப்பார்.

## உங்களுடைய வீட்டு மொழியைப் பேணுவதற்கான ஆலோசனைகள்:

- உங்களுடைய பிள்ளையுடன் எப்போதும் உங்களுடைய வீட்டு மொழியைப் பயன்படுத்துங்கள் அத்துடன் அதைப் பயன்படுத்தும்படி உங்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் ஊக்குவியுங்கள்.
- உங்களுடைய பிள்ளை ஆங்கிலத்தில் கதைத்தால் அவர் என்ன சொன்னார் என்பதை உங்களுடைய வீட்டு மொழியில் உங்களுக்குச் சொல்லும்படி அவரைக் கேளுங்கள். (முதலில் அதை உங்களுடைய வீட்டு மொழியில் நீங்கள் சொல்லுங்கள், அப்படியானல் எப்படிச் சொல்வது என்பதை அவர் கற்றுக்கொள்ளலாம்.)
- மொழியைக் கவர்ச்சியாக்குவதற்கு விளையாட்டுகள், பாடல்கள் மற்றும் கதைகளைப் பயன்படுத்துங்கள்.
- என்ன செய்வது என்பதை உங்களுடைய பிள்ளைக்குச் சொல்வதற்குப் பதிலாக உண்மையான உரையாடல்களை மேற்கொள்ளுங்கள்.
- உங்களுடைய பிள்ளை தன்னுடைய வீட்டு மொழி பேசுவதற்கு எதிர்ப்புக் காட்டினால், வீட்டில் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் (உ+ம். இரவுச் சாப்பாட்டு நேரம்) உங்களுடைய வீட்டு மொழி மட்டுமே பேசுவது என நீங்கள் தீர்மானிக்கலாம்.

பன்மொழி பேசும் பெற்றோருக்கான மேலதிக தகவல்களுக்குப் பார்வையிடுங்கள் **cmascanada.ca/cnc/parents**


CMAS
SUPPORTING CHILD CARE IN THE SETTLEMENT COMMUNITY / SOUTIEN DE LA GARDE DES ENFANTS DANS LA COMMUNAUTÉ DE RÈGLEMENT
Funded by: Immigration, Refugees and Citizenship Canada / Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada